ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளியிடுபவர் வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
திகதி 2021.09.08

## கொவிட்-19 பாதித்த வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்குமான சலுகைகள் மேலும் நீடிக்கப்பட்டிருக்கின்றன

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் புதிய தோற்றம் மற்றும் அதன் காரணமாக கடன்பாட்டாளர்களுக்கேற்பட்ட இடர்பாடுகளைக் கருத்திற்கொண்டு, கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களுக்கு 2021.12.31 வரை ஏற்கனவே (2021.08.31 வரை) வழங்கப்பட்ட சலுகைகளை நீடிப்பதனை பரிசீலனையில் கொள்ளுமாறு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளையும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளையும் (உரிமம்பெற்ற வங்கிகள்) இலங்கை மத்திய வங்கி கேட்டுக் கொண்டுள்ளதாக பொதுமக்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறது. உரிமம்பெற்ற வங்கிகள் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் வழங்குகின்ற மேலதிகச் சலுகைகள் இலங்கை மத்திய வங்கியால் குறிப்பிடப்பட்ட நன்மைகளிலும் பார்க்க குறையாத விதத்தில் ஒட்டுமொத்த நன்மைகளைக் கொண்டதாக இருத்தல் வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

இச்சலுகைகள் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களுக்கு 2022 சனவரி முதல் தொடர்ந்து தங்கள் நிலுவைச் தொகைளைத் திருப்பிச் செலுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய ஒரு வாய்ப்பை வழங்குமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. உரிமம்பெற்ற வங்கிகளின் நாளாந்த வர்த்தகச் செயற்பாடுகளும் தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்டுள்ள அதேவேளை, வைப்பாளர்களுக்கு வட்டி அல்லது முதலை உரிய நேரத்தில் திருப்பிச் செலுத்துதல் மற்றும் அத்தியாவசிய தொழிற்படு செலவினங்களை மேற்கொள்ளுதல் போன்ற அவர்களின் கடப்பாடுகளை தொடர்ச்சியாகப் பூர்த்திசெய்கின்றன என்பதனை கருத்தில் கொள்வது அவசியமாகும். எனவே, கடன் வசதிகளைப் பிற்போடுதல் அல்லது மறுசீரமைப்பைக் கோருவதற்குப் பதிலாக கடனைத் திருப்பிச் செலுத்தக்கூடிய தகுதியுள்ள கடன்பாட்டாளர்களை திருப்பிச் செலுத்துவதைத் தொடங்கவும்/ தொடரவும் இலங்கை மத்திய வங்கி வலியுறுத்துகின்றது. உரிமம்பெற்ற வங்கிகள் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களின் மீளச்செலுத்தும் திறனை கவனத்தில் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுவதுடன் மேலும் கடன்பாட்டாளர்கள் தங்கள் நாளாந்த நடவடிக்கைகளுக்குத் தேவையற்ற சுமையில்லாமல் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு வசதியாக புதிய மீளச் செலுத்தும் திட்டங்களில் சுமுகமாக உடன்பட வேண்டும்.

தற்போது சுற்றுலா மற்றும் பயணிகள் போக்குவரத்து போன்ற இலக்கு பொருளாதாரத் துறைகளில் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களுக்கு சலுகைகளை வழங்குகின்ற ஏனைய இரண்டு திட்டங்கள் 2021.09.30 வரை நடைமுறையிலுள்ளன.

இது தொடர்பாக, 2021.09.01 அன்று உரிமம்பெற்ற வங்கிகளுக்கு விடுக்கப்பட்ட 2021ஆம் ஆண்டின் 08ஆம் இலக்கச் சுற்றறிக்கை இலங்கை மத்திய வங்கியின் வெப்தளமான www.cbsl.gov.lk இல் வெளியிடப்பட்டுள்ளதுடன் தகைமையுடைய கடன்பாட்டாளர்கள் மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு தொடர்புடைய உரிமம்பெற்ற வங்கி/ வங்கிகளையோ அல்லது 1935 துரித எண் (hotline) அல்லது 0112477966 அல்லது 0112477129 என்ற தொலைபேசி இலக்கங்களில் இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களத்தையோ தொடர்புகொள்ள முடியும்.

2021ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க சுற்றறிக்கையின் கீழ் கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வர்த்தகங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகளின் முக்கிய பண்புகள் பின்வருமாறு:

**செயற்படுகின்ற வாடிக்கையாளர்களுக்காக வழங்கப்பட்ட சலுகைகள்**

- **2021 திசெம்பர் இறுதிவரை கடன்களைப் பிற்போடுதல்:** 2021.09.01இல் உள்ளவாறான செயற்படுகின்ற கொடுகடன் வசதிகளைப் பொறுத்தவரை, வேலையிழப்பு, வருமானம்/ சம்பளங்கள் அல்லது விற்பனைகளில் ஏற்பட்ட இழப்பு அல்லது குறைப்பு, வியாபாரத் தொழிற்பாடுகளின் குறைப்பு அல்லது பெறுமதியிழத்தல் அல்லது வியாபாரம் மூடப்பட்டமை போன்றவை உட்பட, தகைமையுடைய கடன்பாட்டாளர்களின் நிதியியல் இடர்ப்பாடுகளைப் பரிசீலனையில் கொண்டு 2021.12.31 வரையான காலப்பகுதி வரை, ஒவ்வொரு விடயமாக ஆராய்ந்து மூலதனம், வட்டி அல்லது இரண்டினையும் அறவிடுவதனைப் பிற்போடுதல். இதன்படி, இச்சலுகையைப் பெறும் கடன்பாட்டாளர்கள் அவர்களின் ஏற்கனவேயுள்ள கடன் வசதிகளை 2022.01.01 இலிருந்து மீளச்செலுத்துவதற்கு ஆரம்பிக்க வேண்டும்.

- **நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான முன்னுரிமை**: நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறையிலுள்ள கடன்பாட்டாளர்களினால் கோரப்பட்ட சலுகைகளுக்கு உரிமம்பெற்ற வங்கிகள் முன்னுரிமை வழங்கல்.

- **சட்ட இசைவுதாமத காலப்பகுதியின் கீழ் கடன்களை ஒரு கடனுக்கு இணைத்தல்:** உரிமம்பெற்ற வங்கிகள் முன்னைய சட்ட இசைவுத்தாமதம்/ பிற்போடப்பட்ட திட்டங்களின் காலப்பகுதியில் சேர்ந்த தொகைகளையும் (மூலதனம், வட்டி மற்றும் தொடர்பான சட்ட இசைவுத்தாமதம்/ பிற்போடப்பட்ட தொகையின் மீது தொடர்பான சட்ட இசைவுத்தாமதம்/ பிற்போடப்பட்ட காலப்பகுதிக்கு பிரயோகிக்கத்தக்க வட்டி) தற்போதைய திட்ட காலப்பகுதியில் சேர வேண்டிய தொகையினையும் (மூலதனம் மற்றும் வட்டி) புதிய கடனொன்றிற்கு இணைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

- **பிற்போடப்பட்ட தவணைப் பணத்தினை (புதிய கடன்) 2022.07.01 இலிருந்து மீள ஆரம்பித்தல்:**

  - குத்தகை வசதிகள் உள்ளிட்ட தவணைக் கடன்களைப் பொறுத்தவரை, மேலே குறிப்பிடப்பட்ட புதிய கடன்களைத் தீர்ப்பனவு செய்வது தொடர்பில் 2022.07.01 இலிருந்து தொடங்குகின்ற 6 மாத காலப்பகுதியில் மீளச் செலுத்துவது பற்றி உரிமம்பெற்ற வங்கியும் கடன்பாட்டாளர்களும் இணக்கத்திற்கு வருவது அவசியமாகும்.

  - முன்கூட்டிய திகதியொன்றில் புதிய கடன்களை மீளச் செலுத்துவதற்கு கடன்பாட்டாளர் விரும்புவாராயின் மீள்கொடுப்பனவினைக் கடன்பாட்டாளர் தொடங்கலாம், அல்லது, புதிய கடன்களைத் தீர்ப்பனவு செய்வதற்கு 6 மாதத்திற்கு அப்பாற்பட்ட காலப்பகுதியொன்றினைக் கோரலாம். அத்தகைய சந்தர்ப்பங்களில் வங்கியும் கடன்பாட்டாளர்களும் சலுகை வட்டி வீதம் தொடர்பில் இணக்கப்பாட்டிற்கு வருதல் வேண்டும்.

- **புதிய கடனுக்கு சலுகை வட்டி வீதத்தை விதித்தல்:**

  - இலங்கை ரூபாக் கடன் வதிகள் - உரிமம்பெற்ற வங்கிகள் 6 மாதங்கள் வரையிலான மீள்கொடுப்பனவிற்காக மேலே குறிப்பிடப்பட்ட புதிய கடன்கள் மீது 2021.09.01 தொடக்கம் ஆண்டொன்றிற்கு (அதாவது 2021.08.31இல் உள்ளவாறான 364 நாள் திறைசேரி உண்டியல் ஏல வீதம் + ஆண்டொன்றிற்கு 1 சதவீதம்) 6.93 சதவீதத்தினை விஞ்சாததொரு வீதத்தினை விதிக்கலாம்.

  - வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட கடன்கள் அல்லது 6 மாதத்திற்கு மேற்பட்ட மீளச் செலுத்தும் காலத்தினைக் கொண்ட கடன்கள் - வங்கிகள் சலுகை வட்டி வீதத்தினை விதிக்கலாம்.

- உரிமம்பெற்ற வங்கிகள் 01.09.2021 முதல் 31.12.2021 வரையிலான காலப்பகுதியில் தவணைத் திகதிகளைக் கொண்ட தொழிற்படு மூலதனம், அடகுபிடித்தல், தற்காலிக மேலதிகப் பற்று, குறுங்கால வர்த்தக நிதியிடல் வசதிகள் போன்றன உட்பட, ஆனால் இவ்வசதிகளுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்படாத விதத்தில் **சுழலும் கொடுகடன்களின் தவணைத் திகதிகளை** விடயத்திற்கு விடயமாக ஆராய்ந்து **2021.12.31 வரை நீடிக்கலாம்.** உரிமம்பெற்ற வங்கிகள் பிற்போடப்பட்ட காலப்பகுதிக்கு மாத்திரம் பிற்போடப்பட்ட தொகைக்கு மேலே குறிப்பிட்டவாறான வட்டியை விதிக்கலாம்.

- இக்காலப்பகுதியில் செலுத்த வேண்டிய தொகைக்கு **சலுகைக் காலப்பகுதியில்** (2021.09.01 இலிருந்து 2021.12.31 வரை) **தண்ட வட்டி வீதங்கள் ஒன்றுசேர்க்கப்படவோ அல்லது விதிக்கப்படவோகூடாது.**

- **எது உங்களுக்கு சிறந்த பொருத்தமானதாக இருக்குமென்பதனை தெரிந்து கொள்ளுங்கள்:** உரிமம்பெற்ற வங்கிகள், பிற்போடப்பட்ட தவணைப் பணத்தினை நேரகாலத்துடன் மீளச்செலுத்துவதிலுள்ள நன்மைகளையும் மீள்கொடுப்பனவுக் காலத்தினை நீடிப்பதிலுள்ள சிக்கல்களையும் கடன்பாட்டாளர்களுக்கு விளக்குதல் வேண்டும். இதன் மூலம் கடன்பாட்டாளர் தகவல்களினை அடிப்படையாகக் கொண்டு தீர்மானத்தினை எடுக்க முடியும்.

- **உங்களது புதிய மீள்கொடுப்பனவு இயலாற்றலுடன் பொருந்தத்தக்க விதத்தில் கடன் வசதியினை மறுசீரமைத்துக் கொள்வதற்கான வாய்ப்பு:** உரிமம்பெற்ற வங்கிகள் கடன்பாட்டாளரின் மீள்கொடுப்பனவு இயலாற்றலையும் அத்தகைய கடன்பாட்டாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட ஏற்றுக்கொள்ளத்தக்க மீளெழுச்சித் திட்டத்தினையும் பரிசீலனையில் கொண்டு ஏற்கனவேயுள்ள கொடுகடன் வசதிகளை நீண்ட காலப்பகுதிக்கு மறுசீரமைத்துக் கொள்ளலாம்.

- **சலுகைகளுக்கு தகைமையுடையவர்களாக இருந்தும் தமது வசதிகளை முன்கூட்டியே தீர்ப்பனவு செய்து கொள்ள விரும்புகின்ற வாடிக்கையாளர்களுக்கான நன்மைகள்:** சலுகைகளுக்குத் தகைமையுடைய கடன்பாட்டாளர்கள் தமது வசதிகள் அல்லது சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் சேருகின்ற தொகைக்கான சலுகைகள் எதனையும் கோராமல் தீர்ப்பனவு செய்வதற்கான தமது விருப்பத்தினைத் தெரிவிக்குமிடத்து, உரிமம்பெற்ற வங்கிகள் வட்டி தள்ளுபடிகளை வழங்குவதற்கு ஊக்கவிக்கப்படுவதுடன் குத்தகை வசதிகளின் எதிர்கால வட்டியினை அறவிடுவது உட்பட, நேரகாலத்துடனான தீர்ப்பனவிற்கான கட்டணத்தினையும் வேறு ஏதேனும் விதிப்புக்களையும் தள்ளுபடி செய்து விடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

**செயற்படாக் கடன்பாட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள்**

- 2021.09.01இல் உள்ளவாறான **செயற்படாக் கடன் வசதிகளை** கடன்பாட்டாளரின் மீள்கொடுப்பனவு இயலாற்றல் மற்றும் ஏற்றுக்கொள்ளத்தக்க மீளெழுச்சித் திட்டம் என்பனவற்றை பரிசீலனையில் கொண்டு ஒவ்வொரு விடயமாக ஆராய்ந்து, நீண்ட காலப்பகுதியொன்றிற்கு **மீள்அட்டவணைப்படுத்தலாம்.**

- 2020.04.01 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ செயற்படாக் கடன்களாக வகைப்படுத்தப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கெதிராக **அனைத்து அறவிடல் நடவடிக்கைகளையும் 2021.12.31 வரை இடைநிறுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன.** உரிமம்பெற்ற வங்கிகள் கடன்பாட்டாளர்களை அளவுக்கதிகமாக தொடர்பு கொள்வது/ கட்டாயப்படுத்துவது அல்லது மேற்குறிப்பிட்ட வாடிக்கையாளர் தொடர்பில் கிரமமான சேகரிப்பு நடைமுறையொன்றின் பகுதியாக அவரிடம் விஜயம் செய்வது என்பன தொடர்பில் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ளுதல் வேண்டும். அறவிடல் தொடர்பில் நீதிமன்றங்களில் வழக்காடல்கள் இடம்பெற்றுவரும் சந்தர்ப்பங்களில் கடன்பாட்டாளர் இச்சலுகைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நீதிமன்றத்துடன் உடன்படிக்கையொன்றினைச் செய்து கொள்ளுதல் வேண்டும்.

**மேலதிகச் சலுகைகள்**

- ரூ.500,000 இற்கும் குறைவான பெறுமதியினைக் கொண்ட காசோலைகளுக்கான செல்லுபடியாகும் காலத்தினை 2021.10.31 வரை நீடித்தல்.

- வெளிப்படையாகவே பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்காக, காசோலைகளின் திரும்பல்கள் மற்றும் அனைத்துக் காசோலைகளினதும் கொடுப்பனவுகளை நிறுத்துவதற்கான விதிப்புக்களை 2021.09.30 வரை நிறுத்துதல், மற்றும் 2021.10.31 வரையான காலப்பகுதியில் அனைத்துக் கொடுகடன் அட்டைகள் மற்றும் ஏனைய கொடுகடன் வசதிகள் மீதான தாமதக் கொடுப்பனவுக் கட்டணத்தினை இடைநிறுத்துதல்.

- இத்திட்டத்தின் கீழ், தகைமையுடைய கடன்பாட்டாளர்களிடமிருந்தான கடன் விண்ணப்பங்களை கொடுகடன் தகவல் பணியகத்தின் மோசமான பதிவேடுகளை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு நிராகரிக்கக்கூடாது.

- இத்திட்டத்தில் பங்கேற்பது எதிர்காலத்தில் கடன்பாட்டாளர்களின் கொடுகடன் மதிப்பிண்ணின் மீது தாக்கத்தினையோ அல்லது எதிர்காலக் கொடுகடன் தகவல் பணியகத்தின் அறிக்கைகள் மீது எதிர்மறையான தன்மையினை பிரதிபலிக்கவோ மாட்டாது.

- தற்பொழுது காணப்படும் பயணத் தடைகள் காரணமாகப் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களிடமிருந்து கடன்களின் மீள்கொடுப்பனவுகளை உயர்ந்தபட்சம் 15 நாட்களுக்குத் தாமதிக்குமாறு விடுக்கப்படும் கோரிக்கைகளை, மேலதிக வட்டி எதனையும் விதிக்காமல் அல்லது அத்தகைய தாமதத்திற்கான விதிப்புக்களைச் செய்யாமல் பரிசீலித்தல்.

**விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி:** சலுகைத் திட்டத்திற்கு விண்ணப்பிக்க விரும்பும் தகைமையுடைய கடன்பாட்டாளர்கள், தொடர்பான உரிமம்பெற்ற வங்கிகளிடம் 2021.09.21 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ எழுத்து மூலமாக அல்லது இலத்திரனியல் ஊடகம் மூலமாக கோரிக்கையினை விடுவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். உரிமம்பெற்ற வங்கிகள், இறுதித் திகதிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் ஏதேனும் கோரிக்கையினை, அத்தகைய கோரிக்கை தாமதமாகச் செய்யப்படுவதற்கான காரணங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்க இருப்பின் ஏற்றுக்கொள்ளலாம்.

**மீளாய்விற்காக மனுச்செய்யும் நடைமுறை:** விண்ணப்பம் நிராகரிக்கப்படும் சந்தர்ப்பத்தில், வங்கிகள் அத்தகைய நிராகரிப்பதற்கான காரணங்களுடன் 14 நாட்களுக்குள் எழுத்து மூலம் வாடிக்கையாளர்களுக்கு தெரிவிப்பது விரும்பத்தக்கது. நிராகரிப்பிற்கான காரணம் வாடிக்கையாளருக்குத் திருப்தியில்லையெனில் இலங்கை மத்திய வங்கியின் இணையத்தளத்தில் (www.cbsl.gov.lk/fcrd) பதிவிறக்கம் செய்யக்கூடியதாகவுள்ள முறைப்பாட்டு சமர்ப்பிப்புப் படிவத்தினைப் பயன்படுத்தி நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களத்திற்கு மீளாய்விற்காக முறைப்பாடொன்றினைச் சமர்ப்பிக்கலாம்.